உ
சிவமயம்



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும்
கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# இராஜரத்தினம் கதிர்காமநாதன்

அவர்களின் நினைவு குறித்து வெளியிடப்படும்

# கதிர்காமநாதம்

26-01-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
## சமர்ப்பணம்

எங்கள் குடும்ப விருட்சத்தின் ஆணிவேராக விளங்கி எங்களெல்லோருக்கும் ஆதாரமாகி, அரவணைத்து எங்களை ஆக்கத்தின் உச்சத்துக்கு அழைத்துச் செல்வதில் அயராதுழைத்த அருள் தெய்வத்துக்கு, எம்வீட்டில் அம்மா முதல் அப்பா என்றே ஆசை பாசத்தோடு அழைத்துக் குழையும் எங்கள் குடும்பக் கப்பலின் பாய்மரத்துக்குப் பாதபூசைப் பொன் மலராக இந்த நினைவு அஞ்சலி மலரைக் காணிக்கை செய்கிறோம்.


இங்ஙனம்
குடும்பத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்த"



தோற்றம்
17-08-1940

மறைவு
27-12-2011

அமரர்
# இராசரத்தினம் கதிர்காமநாதன்
அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டுகர மார்கழி அப்பூர்வ பட்சந்தான்
பூண்சதுர்த்திப் பொன்திதியில் கந்தரோடை - மாண்பார்
கதிர்காம நாதன் கணநாதன் பாதப்
பதிசேர்ந்தார் ஏத்துகஇப் பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
ஸஸிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்
ஸர்வவிக்நோப ஸாந்தஹே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

வாக்குண்டாம் நல்லமனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணங்கள்
## தேவாரம்

கூற்றாயின வாறுவிலக் ககலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந் தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின்கீழ் இருக்க என்றார்

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலா பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாச கம்என்னும் தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவண பவ

# கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுறுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாழும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமஎனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராஷ்தரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிரும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியம் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் என்தாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப(து) உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்(று) அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்மென்(று) அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜபித்து உகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தைச் சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## அமரர் இராஜரத்தினம் கதிர்காமநாதன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

கத்துங் கடல்சூழ் நித்திலத் தீவாம் இலங்கையில் தமிழர் தாயகப் பூமியின் யாழ்குடா நாட்டில் கந்தர்மடம் என்னும் கவினுறும் நகரில், தந்தை இராஜரத்தினம் என்பார்க்கும், தாய் சரஸ்வதி என்பார்க்கும் தலைப்பிள்ளையாக 1940 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி பிறந்தவர் அமரர் கதிர்காமநாதன் அவர்கள். இவருக்கு ஜெயமணிதேவியின் கணவராகிய நவரத்தினம்(இந்தியா) எனும் ஒரு தம்பியும், காங்கேயன் என்பவரின் மனைவியாகிய சத்தியலட்சுமி(யாழ். கல்வி அதிகாரி) எனும் ஒரு தங்கையும் உடன்பிறப்புகளாக வாய்த்தனர்.

அமரர் கதிர்காமநாதன் தமது இளமைக் கல்வியைக் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், உயர்கல்வியை வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் கற்றுத் தேறினார். தாய் தந்தையரின் சொல்லைத் தட்டாத பணிவு மிக்கவராகவும், தம் தம்பி, தங்கையர்மீது பாசம் மிக்கவராகவும், அவர்களின் கல்வியில், முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவராகவும் குடும்பப் பொறுப்பு மிக்கவராகவும் விளங்கினார்.

இவர் படிப்பு முடித்து இலங்கை அரசின் பொதுப்பரீட்சையில் தெரிவாகிக் களஞ்சியப் பொறுப்பாளர் நியமனம் பெற்றுத் தலைநகர் கொழும்பில் தமது பணியை ஆரம்பித்தார். திரு. கதிர்காமநாதன் அவர்கள் திருமண வயதை அடைந்திருந்த நிலையில், தமது பெற்றார், உற்றார் மணம்பேசி நிச்சயித்த கந்தரோடையைச் சேர்ந்த தம்பிராசா - மகேஸ்வரி தம்பதியரின் மகளான, பாலசிங்கம் என்பாரின் தங்கையான சரோஜினிதேவி என்னும் மங்கை நல்லாளை 1969ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு வாழ்க்கைத் துணையாக மணம்புரிந்து ஏற்றுக் கொண்டார்.

இல்லற தர்மங்கள் அனைத்தும் பேணிக் கதிர்காமநாதனும் மனைவி சரோஜினிதேவியும் ஆனந்தமாக வாழ்ந்த காலத்தில் கொழும்பிலும் பின்பு இடமாற்றம் வழங்கப் பெற்று யாழ்ப்பாணத்திலும், அதன்பின் வவுனியாவிலும், தொடர்ந்து நாவற்குழி, காங்கேசன்துறை முதலான இடங்களிலும் தமது உத்தியோகப்பணிகளை ஆற்றி முடிவில் யாழ்ப்பாண அலுவலகத்தில் பணி ஓய்வைப் பெற்றார்.

இந்த இல்லறக் காலப்பரப்பில் செல்வன்கள் பாலேந்திரன்(பாபு), இராஜேந்திரம்(இராஜு), அமரர் குலேந்திரன்(குலேன்), யோகேந்திரன்(யோகன்) என்னும் நான்கு புதல்வர்களைப் பெற்று பூரித்தனர் கதிர்காமநாதன்-சரோஜினிதேவி தம்பதியினர். கந்தர்மடம் பழம்றோட்டுப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மகோற்சவத்தில் தீர்த்தத் திருவிழாவினையும், கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார், கந்தரோடை வற்றாக்கை அம்மன் கோவில் ஓட்டங்கட்டு வைரவர் கோவில் என்பவற்றின் கட்டடத் திருப்பணிகளுக்கும் நிதியுதவிகள் புரிந்தார்.

தமது இளமைக் காலத்தில் கந்தர்மட வீட்டிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருந்த நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழா 25 நாட்களும் விரதம் மேற்கொண்டிருந்தார். அந்த விரதத்தைத் தமது கடைசிக் காலம் வரை தினமும் ஆலய வெளி வீதியைப் பிரதிஷ்டை செய்து, பக்தி சிரத்தையோடு தூய்மையாக மேற்கொண்டு வந்தார்.

தம் வலக்கை செய்யும் தர்மம் இடக்கைக்கும் தெரியாமல் காத்த வண்ணம் வறிய பல குடும்பங்களுக்கு வாழ்வளித்தவர், நிதி அளித்தவர், இடர் களைந்தவர் அமரர் கதிர்காமநாதன் அவர்கள். அவரிடம் காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு சிறப்பு சொற்களை மட்டாகப் பேசிப் பணிகளைப் பெருக்கமாகச் செய்யும் பெரும்பண்பாகும்.

இத்தகைய உயர்பண்புகள், பணிகளின் பெறுபேற்றைத் தம் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திலும் தொழில்துறை வளர்ச்சியிலும் கதிர்காமநாதன் கண்டிருக்கிறார். இவர்தம் மூத்த புதல்வன் பாலேந்திரன்(பாபு) இளமைக்கல்வியை கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும், உயர்கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், பல்கலைக் கழக கல்வியை இலண்டனிலும் கற்றுப் பொறியியலாளராகப் பட்டம் பெற்றார். கொழும்பைச் சேர்ந்த கணேசன் - மலர்விழி தம்பதியரின் புதல்வி அஜந்தா எனும் மாதரசியை மங்கலவாழ்வை புரிந்து, திவ்யா, வித்யா எனும் பெண்குழந்தைகளைப் பெற்றுப் பீடுற வாழ்கிறார்.

அடுத்த மகன் இராஜேந்திரம் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றில் கல்வியை முடித்து, கனடா, ஓட்டாவா பல்கலைக் கழகத்தில் மின் பொறியிலாளராகப் பட்டம் பெற்றார். உசனைச் சேர்ந்த அம்பலவாணர் - நல்லதங்கம் தம்பதியினரின் கடைக்குட்டி மகளான ஜெயதீபாவை மணந்து செல்வன் இராஜேந்திரம், பிரீத்தி எனும் பெண் குழந்தையையும் குலேன் எனும் ஆண்மகவையும் பெற்றுக் கனடாவில் பெருவாழ்வு வாழ்கிறார்.

மூன்றாவது புதல்வன் அமரர் குலேந்திரன் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியசாலையில் இளமைக் கல்வியை முடித்து யாழ். இந்துவில் உயர் கல்வியை கற்றுக் கொண்டிருந்த காலத்தில் 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஏற்பட்ட துயரச் சம்பவத்திற்கு காத்திராப் பிரகாரமாகப் பலியாக நேர்ந்து விட்டது.

நான்காவது புதல்வன் யோகேந்திரன் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் ஆரம்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியையும் யாழ். பரியோவான் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்று, லண்டன் பல்கலைக்கழகத்தில் பொறியிலாளர் பட்டப் படிப்பை முடித்துத் தொழில் புரிந்து வருகிறார்.

தம் புதல்வர்கள் கல்வியில் உச்ச நிலையை அடைய வைப்பதையே தம் வாழ்நாட்களாகக் கொண்டுழைத்த அமரர் கதிர்காமநாதன், அவர்களின் கல்விப் போக்குவரத்து வசதிக்காக யாழ்நகர் எல்லைக்குள், தட்டார் தெருச்சந்திக்கு அண்மையிலும் ஒரு வீடு கட்டி அங்கு குடும்பத்தோடு குடியேறினார். தமது மூன்று புதல்வர்களையும் நாட்டுச் சூழல் காரணமாக இங்கிலாந்துக்கும் கனடாவுக்கும் அனுப்பி பொறியியலாளர்களாக மிளிர வைத்தார். ஆங்காங்கு இரு புதல்வர்கள் பாலேந்திரன், இராஜேந்திரம் ஆகியவர்களுக்கு இதுவரை ஏற்ற இடங்களில் திருமணமும் செய்து வைத்தார். குடும்பமாக இலண்டன் சென்று திவ்யா, வித்யா என்னும் பேர்த்திப் பிள்ளைகளின் பிறந்த தினங்களை கொண்டாடி மகிழ்ந்தார். அதுபோல கனடா வந்து பிரீத்திப் பேர்த்தியினதும் தமது ஆண் சந்ததிக் கொழுந்தான பேரன் குலேனினதும் பிறந்த வீட்டிலும் கலந்து மகிழ்ந்திருந்தார்.

அமரர் கதிர்காமநாதன் கடந்த டிசம்பர் 27ஆம் திகதி தீடீர் மாரடைப்புத் தாக்கத்தினால் மருத்துவ மனையில் இறைபதம் எய்தினார். மருத்துவ மனைக்கு 25ஆம் திகதி நோயாளர் காவு வண்டியில் ஏற்றப்பட்டபோது "ராஜூ நீ காரில் வரப் போகிறாயா? அம்புலன்சில் வரப் போகிறாயா என்று அவர் கேட்டது தான் அவர் பேசிய கடைசி வார்த்தைகள். நிலைமை அறிவிக்கப்பட்டு இலண்டனிலிருந்து ஏனைய இரு பிள்ளைகளும் வந்தடைந்த நிலையில் எவ்வித உத்தரிப்புமின்றி அமரரின் ஆவி பிரிந்தது. அன்னாரது புண்ணியப் பேறாக ஊரில் தானோ தன் அன்பு மனையாளோ யாருமற்றவர்களாக மரணிக்கும் அவலநிலை தவிர்க்கப்பட்டது என்று அமரரின் பிள்ளைகள் தங்கள் மனங்களைத் தேற்ற முயல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கதிர்காமநாதன் அவர்களின் பிரிவால் துயருறும் மனைவி பிள்ளைகள், குடும்பங்களுக்கு மனச் சாந்தியையும் அமரருக்கு ஆத்ம சாந்தியையும் அருளும்படி அருளானந்தப் பிள்ளையாரையும் பழம்றோட்டுப் பிள்ளையாரையும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## என்றென்றும் எங்களுடன் இருந்திடுங்கள்

## துணைவியின் துயரம்

என் பிள்ளைகளுக்கு அப்பாவாகவும், கட்டிய மனைவியான எனக்கும் கணவராக மட்டுமன்றி அப்பாவாகவும் இருந்த-இன்றும் ஆத்மார்த்தமாக இருக்கின்ற என் குடும்பத் தெய்வமே நீங்கள் பூதவுடல் நீத்த பின்பும் இன்றுவரையும் தான் "சறோ" குளிசை போட்டாயா? என்று நேரம் தவறாமல் கேட்பது என் மனத்தில் கேட்கிறது. சக்தியிழந்து சக்கர நாற்காலியில் இருக்கும் என் மனதுக்கு ஒழியாத சக்தியாக உங்கள் ஆன்மா என்னோடு இருப்பதை உணர்கிறேன். உங்கள் பிள்ளைகளும் அவ்வாறே உணர்கிறார்கள். ஊரில் சொத்துச் சுகங்கள் குவிந்திருந்தாலும், நீங்கள் இல்லாத நிலை ஒன்று வருமென்று முன்கூட்டி அறிந்து என்னைப் பாதுகாப்பதற்காகப் பிள்ளைகளின் நிழலில் கொண்டுவந்து சேர்த்துச் சென்றீர்களே. உங்கள் அந்தப் பாச அருள் என்றும் வற்றாமலிருக்க எங்கள் வற்றாக்கை அம்மன் வழி செய்ய வேண்டுமப்பா.

மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா வேணும்! அப்பா வேணும்!

அப்பா,

எங்கள் உயிர்களிற்கு முதுகெலும்பாக இருந்து
நிமிர்ச்சிதந்து வழிகாட்டியவர் நீங்கள்தான் - இன்று
பாரினில் எம்மை பரிதவிக்கவிட்டு
எங்கப்பா சென்று விட்டீர் - அப்பா
உங்களைப் பிரிந்து வெளிநாடுகளில் இருந்துவிட்டோம் - உங்கள்
இறுதிக் காலத்தில் அனைவரும் ஒன்றாக இருப்போம் என்று
ஆசையாக கனவு கண்டோம் - அது
காலனிற்கு பொறுக்கவில்லையப்பா - அப்பா
கல்வியை கண்டிப்புடன் கற்பித்தீர்கள்
நல்வழிகாட்டி நற்பண்புகளுடன் வளர்த்தீர்கள் -அப்பா
இனிமேலும் எங்கள் பலமாக எங்களுக்குள்ளே
என்றென்றும் இருந்து உதவுங்கள் - அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்

பிள்ளைகள்
Babu, Raju



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் விம்மி புடைத்து
வெந்து நொந்து கிடக்கின்றது என்
அப்பாவின் மறைவினாலே - ஆம்
அன்று அப்பாவிற்கு கடுமை என்றார்கள்
அவசரமாய் வரவும் சொன்னார்கள்
வந்தேன் அவசரமாய் அப்பாவுடன் கதைப்பேனென்றே-
ஆனால்
நாம் அனைவரும் கூடி நிற்க - எம்
அப்பாவின் உயிர் எம்மைவிட்டு போகுமென்று - நான்
அணுவளவும் எண்ணியிருக்கவில்லை - அப்பா!
கதைக்க சொன்னார்கள் - "யோகன்
வாய்விட்டு அழு!" என்றும் சொன்னார்கள் - அப்பா
முடியவில்லையப்பா உங்களை நான்
அந்தக் கோலத்தில் பார்த்தபோது

கடைசியாய் பிறந்த என்னை - அப்பா
கண்டிப்பான பாசமாய் வளர்த்தார்
படிஎன்பார் கண்டிப்பாக
படிக்காது விட்டாலோ
அடியும் போடுவார் - அப்பா நாம்
கடைசியாக அனைவரும் யாழ்ப்பாணம் சென்றபோது
நேரம்பிந்தி வீடு வந்தேன் என்று
வாசலிற்கு வெளியேவிட்டு
கதவைப் பூட்டினீர்களே - அப்பா
இனி என்னை கண்டிப்பார் யாருள்ளார் அப்பா?
London வந்து என்னுடன் என் வீட்டில்
அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று
ஆசையாய் கனவு கண்டேனே அப்பா - அது
நிறைவேற முன்னே எம்மைவிட்டு நீங்கள்
நீண்டதூரம் சென்றதேனோ - அப்பா
யோகனிற்கு கலியாணம் பேசவேண்டும் என்று
ஓடித்திரிவீர்களே - இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணக் காட்சியைக் காணமுன்பே
காலன் உங்களை அழைத்ததேனோ - அப்பா
கண்ணீரை அடக்க முடியவில்லை - அப்பா
சேவகனாக இருந்த என் தூக்கம்கூட - இன்று
எனக்கு எஜமானனாக இருக்கிறதே - அப்பா
தனிமையில் நான் இருக்க
என்னை ஏன் விட்டுச் சென்றீர்கள்?

நான் ஏதாவது கதைக்கும் போதெல்லாம்
ஒன்றுக்கும் யோசிக்காதே யோகன் என்பீர்களே - இன்று
எனக்குள் நானே பேசிக் கொள்கிறேன் - அப்பா
வீட்டுக்கு வெளிச்சம் போட்ட நீங்களே - எம்மை
இருட்டுக்குள் விட்டுவிட்டு எங்கு சென்றீர்களோ?
அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய
அருளானந்தம் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

யோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுடன் பெரியண்ணை

பெரியண்ணை என்றாலே எங்கள் வீட்டில் அவரும் ஒருவர் என்றே கூறிவிடலாம். எங்கள் குடும்பத்தின் துக்கத்திலும், சந்தோசத்திலும் எங்களைவிட மிக கரிசனையுடன் செயற்படும் ஒருவர் பெரியண்ணை என்றால் மிகையாகாது. அவர் அரசாங்க ஊழியராக கடமை ஆற்றியபோது நாள்தோறும் இரு தடவையாவது சின்னம்மாவை(எனது அம்மா) பார்க்க வந்து விடுவார். சின்னம்மாவின் கையினால் பரிமாறப்பட்ட உணவை ருசிப்பதில் அவருக்கு அலாதிப் பிரியம். வேறொரு இடத்துக்குச் செல்ல வேண்டியவர், அவரை மறந்தே சின்னம்மா வீட்டுக்கு வந்து விடுவார். பின்புதான் யோசிப்பார். எங்கேயோ செல்லவேண்டிய நான் இங்கே நிற்கின்றேன் என்று. சனி, ஞாயிறு என்றாலே வீட்டுக்கு வந்து என்னை தனது வீட்டுக்கு கூட்டிச் சென்று விடுவார். விபரம் தெரியாத நாட்களில் அவர் பழகியதால் அவரை அப்பா என்றே அழைப்பேன். அந்த நினைவுகள் இப்போதும் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கிறது. விபரம் தெரிந்த நாட்களில் எனது அம்மா, அப்பா சகோதரங்கள் எவரும் அவரது எந்த முடிவையும் மீறியதாக எனக்கு நினைவில்லை. எனது திருமணக் காலத்தில் தனது சொந்த மகளுக்கு நடக்கப்போகும் காரியம் என்ற விதத்தில் செயல்பட்டவர் என்று நினைக்கும்போது, அவரது பிரிவு தாங்கொணாத் துயரத்தை தருகின்றது. எனது சகோதரர் ஒவ்வொருவருக்கும் நல்லதொரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். நல்லூர் திருவிழா நாட்களில் தனது குடும்பத்துடன் வந்து எங்களுடன் நேரத்தைக் கழிப்பதே அவரது அளவு கடந்த மகிழ்ச்சி. இவ்வுலகை விட்டுப் பிரியும் கடைசி நேரத்துக்கு முன்பும் என்கையினால் பரிமாறப்பட்ட உணவை உண்டு மகிழ்ந்தார் என்று நினைக்கும்போது துக்கம் என் இதயத்தைப் பிழிந்து எடுக்கின்றது. பெரியண்ணையின் ஆத்மா சாந்தி பெற இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றேன்.

வசந்தி (மகள், சகோதரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Dearest Appappa!

You have been a loveable grandfather. We are proud of you. We had a nice time whenever you were around. We enjoyed playing with you. Now we are going to miss you. Rest in peace!

Loving Grandchildren

Divya, Preethi, Vidya & Kulen



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய அன்பர் இ. கதிர்காமநாதன் அவர்கள்

உலகத்தில் இன்பமும் சிறப்பும் பெற்று உயர்வது, ஒருவர் அன்புநெறி பிறழாமல் வாழ்வதன் பயனே ஆகும். அன்பு என்பது பிறரை நேசிக்கச் செய்யும் பண்பாகும். அந்த நேசப்பண்பு எல்லோரையும் நெருங்கிய நண்பர்களாக மாற்றும் சிறப்புடையதாகும். அன்பின் உறைவிடமாக அடக்கமாக அனைவராலும் விரும்பப்பட்டவராக வாழ்ந்தவர் அமரர். கதிர்காமநாதன் ஆவார்.

இவரிடம் ஈதல், இசைபட வாழ்தல் முதலிய நற்பண்புகள் காணப்பட்டன. இல்லறத்தில் சிறந்த மனையாளொடு வாழ்ந்து நன்மக்களைப் பெற்று, ஆலயங்களின் திருப்பணிகளுக்கு மனமுவந்து பொருளுதவிகளும் புரிந்தவர்.

“பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றும் பிற’ உயிருக்கு அழகு தருவது பணிவும் இனிய சொல்லும் ஆகும். இவை அமரர் கதிர்காமநாதனிடம் காணப்பட்ட ஆபரணங்களாகும். மனைவியும் மக்களும் நற்குணங்கள் உடையவர்கள். தனது மக்களைச் சீர்பெற வைத்து அவர்கள் நன்னிலையில் இருப்பதற்கு காரணமாயிருந்தவர் இவரென்றால் மிகையன்று.

என்றும் எல்லோராலும் விரும்பப்படும் அமரர் கதிர்காமநாதன் ஓர் இனிய அன்பர். இவரது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் அமைதிபெற வேண்டுகிறோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கனக புவனேந்திரநாதன்
ஓய்வுநிலை அதிபர்.
கந்தரோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எங்கள் குடும்ப மூலவர் திடீர் சுகவீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வேளையிலிருந்து கடைசி நிமிடம் வரை எங்களோடு இரவுபகல் நின்று உதவிகள் புரிந்த உறவினர்களுக்கும்

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து விரைந்து வந்து துயர் பகிர்ந்து பல்வேறு விதங்களில் ஆறுதல் அளித்த உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் அயலவர்கள் எங்கள் சகபணியாளர் அனைவருக்கும்

இறுதிச்சடங்குகளின்போது திருமுறைகள் ஓதியும், இரங்கலுரைகள் நிகழ்த்தியும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், மலர் வளையங்கள் சாத்தியும் அன்னாருக்கு மதிப்பளித்த அன்பர்கள் அனைவருக்கும் இந்த நினைவு மலரை அச்சிட உதவிய அனைவருக்கும்

அமரரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டு வைபவத்தைச் சிறப்பித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த பணிவான நன்றியை இத்தால் கூறி நிற்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரமக்கள்

### தேற்றம்


ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில் - வேண்டா
நமக்கும் இது வழியே! நாம்போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்

ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கதிர்காமநாதன் குடும்ப விருட்சம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையாகிறது.
மற்றொரு நாள் அதுவே வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதி ஆகும்.



## The Gist of Gita

Whatever happened to you,
it went on well.
Whatever is happening now
is going well.
Whatever has to happen
will also be good.
What have you loPst
for you to cry?
What have you brought with you
for you to lose?
What have you created
for it to go waste?
Whatever you obtained
was taken from here.
Anything you gave away
was given to you here.
What is yours today,
will belong to someone tomorrow.
In another day
it may belong to someone else.
This change is the Law
of the Universe.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Viveka 416-80PRINT